மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

அ.வ.எண்.288/2013

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உமாசங்கர் | தொழில் | |
| தகப்பனார் பெயர் | வெங்கடாஜலம் | வகுப்பு | --- |
| வயது | | சமயம் | --- |
| நாள் | 13.02.2025 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.5 | | |

இன்று 13.02.2025 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

1) நான் தற்போது மேட்டூர் வட்டாட்சியர் அலுவலத்தில், முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில், வட்டாட்சியர் சார்பாக வட்டாட்சியர் அதிகார கடிதம் அளித்ததன் பேரில், தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் அசல் மற்றும் சான்றிட்ட நகல்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். மேற்படி மேட்டூர் வட்டாட்சியரால் எனக்கு வழங்கப்பட்ட அதிகார கடிதம் வாதிகள் தரப்பு 3ம் நபர் சாட்சியின் சான்றவாணம் **சா.சா.ஆ.1 (Ex.X1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) நீதிமன்ற அழைப்பாணையில் 1938 முதல் 2025ம் தேதி வரையில் கோல்நாயக்கன்பட்டி கிராம ச.எண்.65/10க்குரிய அடங்கல் கணக்குகள் கோரப்பட்டுள்ளது. அவற்றில் 1373, 1381, 1382, 1386, 1388, 1389, 1402, 1405 முதல் 1420 வரையும், 1422 முதல் 1435 வரையிலுமான பசலி ஆண்டுகளுக்குரிய அடங்கல் பதிவேடுகள் மட்டும் பதிவறையில் கிடைக்கப்பெற்றது என்பதற்கான சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி சான்றிதழ் வாதிகள் தரப்பு 3ம் நபர் சாட்சியின் சான்றவாணம் **சா.சா.ஆ.2 (Ex.X2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) கோல்நாயக்கன்பட்டி கிராம ச.எண்.65/10 க்குரிய மேற்கண்ட அடங்கல் கணக்குகளின் (எண்ணிக்கை 37) சான்றிட்ட நகல்கள் வாதிகள் தரப்பு 3ம் நபர் சாட்சியின் சான்றவாணங்களின் கோர்வை **சா.சா.ஆ.3 (Ex.X3 series)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கோல்நாயக்கன்பட்டி கிராம பட்டா எண்கள்.561, 683, 909, 1063, மூல ச.எண்.65/10 க்குரிய சிட்டா (எண்ணிக்கை 4) ஆகியவற்றின் சான்றிட்ட நகல்கள் வாதிகள் தரப்பு 3ம் நபர் சாட்சியின் சான்றவாணங்களின் கோர்வை **சா.சா.ஆ.4 (Ex.X.4 series)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) கோல்நாயக்கன்பட்டி கிராம ச.எண்.65/10 க்குரிய அ–பதிவேட்டின் சான்றிட்ட நகல் வாதிகள் தரப்பு 3ம் நபர் சாட்சியின் சான்றாவணம் **சா.சா.ஆ.5 (Ex.X.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட கோல்நாயக்கன்பட்டி கிராம ச.எண்.65/10 க்குரிய புலவரைபடத்தின் சான்றிட்ட நகல் வாதிகள் தரப்பு 3ம் நபர் சாட்சியின் சான்றாவணம் **சா.சா.ஆ.6 (Ex.X.6)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) கோல்நாயக்கன்பட்டி கிராம ச.எண்.65/10 நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் பொழுது 1984ம் வருடத்தில் ச.எண்கள்.65/10A, 65/10B, 65/10C என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 அ–பதிவேட்டில் ச.எண்.65/10 கந்த கவுண்டர் பெயரில் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.13 அடங்கல் கணக்கில் ச.எண்.65/10 ஆனது, ச.எண்.65/10A எனவும், ச.எண்.65/10B எனவும் உட்பிரிவு செய்யப்பட்டு, அதில் ச.எண்.65/10A ஆனது, பழனியப்ப கவுண்டர், மாதையன், பாப்பாத்தி, பழனியம்மாள் ஆகியோர் பெயரில் கூட்டாக உள்ளது. ஆனால், பசலி ஆண்டு தெரியவில்லை.

6) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 பட்டா நில உடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு முந்தைய பட்டா பாஸ் புக் ஆகும். அதில் ச.எண்.65/10 ற்கு நிலஉடைமையாளர் பழனியம்மாள் என குறிப்பிடப்பட்டுள்ளது. நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பட்டா அனுபவம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

7) 1938 லிருந்து 1962 வரையிலான ஆவணங்கள் மேட்டுர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லை.

<u>1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.5 ஐ குறுக்கு விசாரணை:–</u>

1) தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.12 ஆவணம் 1954 ம் வருடத்தில் கிராம முன்சிப்பால் வழங்கப்பட்டது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.10 அடங்கல் பதிவேடுகள் வட்டாட்சியர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட ஆவணங்கள் என்றால், சரிதான். 1373 பசலியில் ச.எண்.65/10 ஆனது, சின்னம்மாள் வகையறா பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

2) 1954 ம் வருத்தில் கந்த கவுண்டர் மனைவி பழனியம்மாள் என்பவரிடமிருந்து பழனியப்ப கவுண்டர் சின்னு (எ) சின்னம்மாள் பதிவு கிரயம் பெற்றதன் அடிப்படையில்தான் மேற்படி ச.எண்.65/10 ல் மேற்படி சின்னம்மாளின் பெயர் வருவாய் ஆவணங்களில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால், மேற்படி பட்டா மாறுதல் கோப்புகளை பரிசீலித்தால்தான் அது குறித்து உறுதியாக கூற இயலும். 1373 பசலி ஆண்டில் ச.எண்.65/10 ல் சின்னம்மாள் என்பவர் 0.92 சென்ட் நிலத்தில் பயிரிட்டு சாகுபடி செய்ததாக குறிப்புகள் உள்ளது என்றால், மேற்படி பசலி ஆண்டில் 5 ம் மாதத்தில் 0.60 சென்ட் நிலத்தில் கம்பும், 9 ம் மாதத்தில் 0.85 சென்ட் நிலத்தில் நெல் பயிர் செய்யப்பட்டதாகவும், 1 ம் மாதத்தில் 0.70 சென்ட் நிலத்தில் ராகி பயிரிட்டதாகவும் குறிப்புகள் காணப்படுகிறது.

3) ச.எண்.65/10 ஆனது, ச.எண்கள்.65/10A,B,C என உட்பிரிவு எப்போது செய்யப்பட்டது என்றால், 1984 ம் வருத்தில் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் உட்பிரிவு செய்யப்பட்டது. ச.எண்.65/10A யார் பெயரில் உள்ளது என்றால், பட்டா எண்.909, 0.01.0 ஏர்ஸ் அளவில் ராமசாமி மற்றும் இரு நபர்கள் பெயரில் தாக்கலாகியுள்ளது. ச.எண்.65/10B ஆனது பட்டா எண்.683, 0.03.5 ஏர்ஸ் பரப்பில், ராமசாமி என்பவர் பெயரில் தாக்கலாகியுள்ளது. ச.எண்.65/10C ஆனது, பட்டா எண்.561, 0.32.5 ஏர்ஸ் பரப்பில் மாதையன் பெயரில் தாக்கலாகியுள்ளது. பின்னிட்டு, மேற்படி ச.எண்.65/10C

ஆனது, ச.எண்.65/10C1, பரப்பு 0.02.5 ஏர்ஸ், பட்டா எண்.1063, தமிழ்நாடு மின்சார வாரியம் மேட்டூர் நீர் மின் திட்டம் என்ற பெயரிலும், ச.எண்.65/10C2 ஆனது, 0.30.0 ஏர்ஸ் பரப்பில், பட்டா எண்.561, மாதையன் பெயரில் தாக்கலாகியுள்ளது.

4) 1984 க்கு பின்னிட்டு மேற்படி ச.எண்.65/10 மேற்கண்டவாறு உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றால், சரிதான். 2013 ம் வருத்தில் ச.எண்.65/10 என்பது தனி சர்வே எண் அல்ல என்றால், சரிதான்.

<u>6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.5 ஐ குறுக்கு விசாரணை:–</u>

1) இவ்வழக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள வருவாய் பதிவு மாற்றங்கள் அனைத்தும் வருவாய் நிலை ஆணையின் படிதான் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி வருவாய் ஆவணங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்து மாற்றங்களும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டுதான் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி பதிவுகள் தொடர்பாக ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் அது தொடர்பாக ஆட்சேபனைதாரர் உரிய காலத்தில் வட்டாட்சியரிடம் மனு செய்தும், மேற்படி உத்தரவின் பேரில் குறையுற்றால், கோட்டாட்சியர் மற்றும் வருவாய் துறை மேல் அதிகாரிகளிடம் உரிய பரிகாரங்களை, தேடிக்கொள்ளலாம் என்றால், சரிதான்.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.